செ.வெ.எண்.16 நாள்: 05.09.2021

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு துறையின் சார்பில் பல்வேறு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை மற்றும் ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு நல்லாசிரியர் விருது ஆகியவற்றினை மாண்புமிகு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் வழங்கினார்கள். மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பெ.கீதாஜீவன் அவர்கள், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு துறையின் சார்பில் பல்வேறு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை மற்றும் ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு நல்லாசிரியர் விருது ஆகியவற்றினை மாண்புமிகு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று (05.09.2021) வழங்கினார்கள். மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பெ.கீதாஜீவன் அவர்கள், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், இ.கா.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையர் திருமதி.சாருஸ்ரீ, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் / கூடுதல் ஆட்சியர் திரு.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சண்முகையா அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

பின்னர் மாண்புமிகு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 5ம் நாளன்று ஆசிரியர் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் உத்தரவின்படி தூத்துக்குடி மாவட்டத்தில் 11 நல்லாசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சால்வை அணிவித்து சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தூத்துக்குடி மாவட்ட வருவாய் துறையில் கிராம

நிர்வாக அலுவலர், அலுவலக உதவியாளர், இளநிலை வருவாய் அலுவலர் என 7 நபர்களுக்கும், தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி துறையில் இளநிலை உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் என 5 நபர்களுக்கும் என மொத்தம் 12 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் மூலம் கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் தேவிகுளம் தாலுகா பொட்டிமுடி பகுதியில் 6.8.2021 அன்று ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி காயம் அடைந்த நபர்கள் மற்றும் இறந்த நபர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து 3 நபர்களுக்கு ரூ.14 லட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் - கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கம் சார்பாக 10 நபர்களுக்கு ஜவுளி வியாபாரம், தையல் இயந்திரம், ஆடு வளர்ப்பு ஆகிய தொழில் தொடங்குவதற்கு தலா ரூ.10000 வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் - முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் சார்பாக 10 நபர்களுக்கு பெட்டிக்கடை, அரிசி மாவு வியாபாரம், ஜவுளி வியாபாரம், தையல் இயந்திரம், இட்லி கடை, தேனீர் கடை ஆகிய தொழில் தொடங்குவதற்கு தலா ரூ.10000 வழங்கப்பட்டுள்ளது. மக்களின் தேவைகளை விரைந்து நிறைவேற்றும் நம் அரசாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு செயல்படுகிறது என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் பயிற்சி திரு.ஸ்ருதயஞ் ஜெய் நாராயணன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அமுதா, வட்டாட்சியர் திரு.ஜஸ்டின், தி.மு.க. மாணவரணி மாநில துணை செயலாளர் திரு.உமரிசங்கர், முக்கிய பிரமுகர்கள் திரு.ஜெகன் பெரியசாமி, திரு.ஆனந்தசேகரன், திரு.பில்லா ஜெகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.